கனோவின் ஹோட்டல் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

கனோவின் ஹோட்டல் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டடின் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைத் தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு

அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெறவேண்டியவை

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
31 டிசம்பர் 2024 இன் படி ஏனைய வியாபார பெறவேண்டியவை ரூபா.92,048,582 இல் 50 சதவீதம் அல்லது ரூபா.46,325,918 தொகை 360 நாட்களுக்கும் மேலாக நிலுவையாக காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக செயல்படாத குத்தகைதாரர்களிடமிருந்து பெறத்தக்க மொத்தம் ரூபா.48,493,421 இல் ரூபா.46,986,804 ஆனது 90 நாட்களுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது.	செயல்படாத குத்தகைதாரர்கள் தொடர்பான நிலுவைத் தொகையான ரூபா.46,989,004 ஐ மீட்டெடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. எந்தவொரு குத்தகைதாரினதும் நிலுவையில் உள்ள தொகை அவர்களின் பாதுகாப்பு வைப்புத்தொகையில் 90 சதவீதத்திற்கு மேல் மீற அனுமதிக்கப்படாததை உறுதிசெய்ய நிறுவனம் கட்டுப்பாடுகளை பலப்படுத்தியுள்ளது.	360 நாட்களுக்கு மேல் காலாவதியான பெறுவனவுகளை உன்னிப்பாகக் கண்காணித்து மதிப்பாய்வு செய்யவும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.366,647,917 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா.125,700,809 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா.240,947,108 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. முதலீட்டுச் சொத்து மதிப்பீட்டில் ஏற்பட்ட ரூபா. 269,517,245 அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான் பிரதான காரணமாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான வருமானம், நிர்வாகச் செலவுகள் மற்றும் நிகர இலாபம்/(நட்டம்) ஆகியவற்றின் வேறுபாடுகளுடன் கூடிய பகுப்பாய்வு பின்வருமாறு.

நிதிக்கூற்றுக்களின் விடயம்	2024	2023	2022	2021	2020	முன்னேற்றம் / பின்னடைவு 2023-2024	
	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	ரூபா.000	%
வருமானம்	209,485	183,900	162,509	137,556	130,152	25,585	13.91
மொத்த இலாபம்	126,979	116,109	131,937	109,856	109,179	10,870	9.36
ஏனைய செயற்பாட்டு வருமானம்	55,755	43,751	5,547	2,290	747	12,004	27.43
நிதி வருமானம்	60,308	74,868	45,074	12,455	15,511	(14,560)	(19.45)
நிர்வாகச் செலவு	84,651	70,632	58,776	43,506	60,070	14,019	19.84
வரிக்கு பின் இலாபம்	366,648	125,701	97,426	58,865	36,015	240,947	191

- முதலீட்டுச் சொத்து மதிப்பீட்டில் ஏற்பட்ட ரூபா. 269,517,245 தொகையான அதிகரிப்பே வரிக்குப் பிந்தைய இலாபத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான சில முக்கிய விகிதங்கள் பின்வருமாறு உள்ளன.

விகிதங்கள்		2024	2023	2022	2021	2020
மொத்த இலாப விகிதம்	(%)	60.61	63.13	81	79.9	83.9
மூலதனத்தின் மீதான திரும்பல் விகிதம்	(%)	24	15	9	6	4
நடைமுறை விகிதம்		15:1	12:1	10:1	8:1	9:1
விரைவு விகிதம்		15:1	11:1	10:1	8:1	9:1
பங்கொன்றின் உழைப்பு விகிதம் (EPS)		4.21	1.44	1.12	0.68	0.43

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனம் வெலிபென்ன தெற்கு அதிவேக நெடுஞ்சாலை சேவைப்பகுதியில் (Arcade) உள்ள இடங்களை குத்தகைக்கு விடுவதிலிருந்து அதன் பிரதான வருமானத்தை ஈட்டுகின்றது. ஒரு சதுர அடிக்கான குத்தகை மற்றும் சேவை கட்டணங்களை நிர்ணயிக்க நியமம் அல்லது நிலையான முறைமை ஒன்றினை நிறுவனம் கொண்டிருக்கவில்லை, மேலும், இந்த மாற்றங்களை நிர்வகிக்க நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் கையேடு, வழிகாட்டுதல் அல்லது கொள்கை எதுவும் அமுல்படுத்தப்பட்டிருக்காத நிலையில், ஒரே குத்தகைதார்களுக்கு ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொதுப் போட்டித் தேர்வு எதுவுமின்றி ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டன.	போட்டித் தேர்வு நடைமுறையைப் பின்பற்றி காலாவதியான கடைகள் குத்தகைக்கு விட மதிப்பீட்டு துறையிடமிருந்து மதிப்பீட்டை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிர்வாகத்தால் சதுர அடிக்கு குத்தகை மற்றும் சேவை கட்டணங்கள் நிர்ணயிக்கும் அடிப்படையுடன் சரியான முறையில் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் கையேடு/கொள்கை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ)	குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 9((z) இன் படி, “குத்தகையாளர், நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்து பூர்வ அனுமதியின்றி, குத்தகைக்கு பெறப்பட்ட இடத்தின் அமைப்பை தற்காலிகமாகவோ அல்லது அரை-நிலையானதாகவோ மாற்ற அல்லது மேலதிகமாக அமைக்கவோ கூடாது” ஆனால், ஒரு குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட ஒரு கடைப்பகுதி சபையின் அனுமதியின்றி நிரந்தர கட்டமைப்பை மாற்றி அமைத்திருந்தது, மேலும் நிறுவனம் இதை கண்காணிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.	ஏற்றுக்கொள்கின்றோம். இது தொடர்பான சபை அனுமதி ஆவணம் இல்லாததுடன் கட்டமைப்பு மாற்றத்திற்கான அனுமதியும் பெற்றிருக்கவில்லை. இது கட்டிடத்தின் மதிப்பை உயர்த்தும் மாற்றமாகும், ஆனால் முகாமை இந்த விவகாரத்தை அடுத்த கணக்காய்வு குழு கூட்டத்தில் பரிசீலித்து முடிவெடுக்கச் செய்யும்.	ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டில் குளிரூட்டிகளைப் பழுது பார்க்க ரூபா.2,495,031 செலவிடப்பட்டிருந்தது, ஆனால் பராமரிப்பு மற்றும் குளிரூட்டிகளைப் பழுது பார்க்கும் சேவைக்காக வழங்குநர்களிடமிருந்து அதிகாரப்பூர்வ சேவை ஒப்பந்தம் பெறப்படவில்லை. எனினும், செலவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வின் போது இரு பகுதிகளிலுமுள்ள மையப்படுத்தப்பட்ட குளிரூட்டும் அமைப்புகள் சரியாக செயல்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	2013 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட குளிரூட்டும் அமைப்புகள் சுமார் 12 ஆண்டுகள் பழமையானது மற்றும் பாரிய அளவிலான பழுது பார்த்தல் தேவைப்பாட்டிலுள்ளது. முன்னெச்சரிக்கை பராமரிப்புக்காக SLIC உடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன, மேலும் பழுது பார்த்தல் அல்லது மாற்றம் குறித்து முடிவெடுக்க அரசு நிறுவனமொன்றிடமிருந்து விரிவான அறிக்கை பெறப்படும்.	தடையற்ற செயல்பாட்டிற்காகவும் பாரிய அளவிளான குறைப்பாட்டைத் தவிர்கவும் குளிரூட்டும் அமைப்புகள் வழக்கமான பராமரிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	நிறுவனத்தின் CCTV கேமரா அமைப்பை எந்த நியமிக்கப்பட்ட அல்லது பொறுப்பான அதிகாரியாலும் கண்காணிக்கப்படவில்லை. இது பயனுள்ள பாதுகாப்பு கண்காணிப்பு முறைமை இல்லாமையை காட்டுகிறது மற்றும் வளாகத்தின் மொத்த பாதுகாப்புக்கும் இது ஆபத்தை ஏற்படுத்துகிறது. மேலும், நிறுவனம் ரூபா.4,665,820 செலவு செய்திருந்த போதிலும், அந்த அமைப்பில் தரவு சேமிப்பு (backup) வசதி, நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் இல்லாதது அவதானிக்கப்பட்டது.	CCTV அமைப்பை கண்காணிக்க பொறுப்பான ஒருவர் உடனடியாக நியமிக்கப்படுவார்.	நிறுவாகம் CCTV அமைப்பை கண்காணிக்க பொறுப்பான ஒருவரை நியமித்து, பாதுகாப்பு சம்பவங்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	குத்தகை ஒப்பந்தம் இல்லாமல், நிறுவனம் 630 சதுர அடிக் கொண்ட பகுதியை மின் வாகன சார்ஜிங் மையத்திற்காக குத்தகைக்கு வழங்கியிருந்நது. எனினும், 2018 ஜனவரி 16 முதல் நிறுவனம் அந்தக் குத்தகையாளருடன் சேவை ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தது, இதில் குத்தகையாளரின் மொத்த மாத வருவாயின் 12 சதவீதத்தை செலுத்த ஒப்புக்கொண்டார். ஒப்பந்த திகதி முதல், குத்தகையாளர் எந்த மாதாந்திர வருமான அறிக்கைகளையும் சமர்ப்பிக்கவில்லை அல்லது உரிய தொகைகளையும் நிறுவனத்திற்கு செலுத்தவில்லை. 2018 ஜனவரி முதல் நிறுவனம் சுமார் ரூபா.12,000,000 மதிப்புள்ள குத்தகை வருவாயை அல்லது மாதாந்திர சேவை வருமானத்தை இழந்துள்ளது.	24 ஜூலை 2025 அன்று நடந்த சபைக் கூட்டத்தில், சேவை ஒப்பந்தத்தை நிறுத்தவும், விசாரணைகளின் அடிப்படையில் மேலும் நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்தது. சேவைப் பகுதியில் வாகனம் சார்ஜ் செய்யும் அமைப்புகளை அமைக்க RDA ஒப்புதல் அளிக்கவில்லை எனவே, குத்தகை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப திட்டம் நிறுத்தப்பட்டு மறுபரிசீலனை செய்யப்படும்.	குத்தகையாளருடன் சட்டபூர்வமான பிணைப்பு கொண்ட குத்தகை ஒப்பந்தத்தை நிறுவாகம் உடனடியாக முறைப்படுத்த வேண்டும்
(ஆ)	நிறுவனம் கடந்த மூன்று நிதியாண்டுகளில் Subway franchise இயக்கத்திலிருந்து தொடர்ந்து நிகர இழப்புகளை அனுபவித்துள்ளது: 2022 இல் ரூபா.2,517,521, 2023 இல் ரூபா.7,694,948, மற்றும் 2024 இல் ரூபா.8,429,823. இந்த மீண்டெலும் இழப்புகள், franchise இயக்கம் நிறுவனத்திற்கு நிதியியல் ரீதியாக நிலையானதாக இல்லை என்பதை குறிக்கின்றது.	நிறுவனம் கணக்காய்வு பரிசீலனையை ஏற்றுக்கொண்டது, Subway-யின் நிலையான மெனுவின் காரணமாக இலாபங்கள் குறைவாக உள்ளன என்று வெதாணிக்கப்பட்டது. 2025 ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பட்ஜெட் பெக், 2025 ஜூலை முதல் வருவாயை அதிகரித்துள்ளது, மற்றும் கடையை இலாபகரமாக்குவது தொடர்பில் நெருக்கமான கண்காணிப்பு நடந்து வருகிறது. அறிக்கை செய்யப்பட்ட இழப்புகளில் வருடாந்திர குத்தகை செலவான ரூபா.7 மில்லியனும் சேர்க்கப்பட்டுள்ளது.	முகாமை Subway franchise தொடர்வதற்கான நிதியியல் சாத்தியத்தன்மையை கடுமையாக மதிப்பாய்வு செய்து, மேலதிக இழப்புகளை குறைக்க மாற்று உபாயங்களை பரிசீலிக்க வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மேல் மாடியில் மொத்தம் 24,339 சதுர அடிகள் உள்ளன. இதில் 6,696 சதுர அடிகள் குத்தகைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது, மற்றும் 17,643 சதுர அடிகள் ஆரம்பக் காலத் திட்டத்தின் பசுமை கொள்கைக்கு ஏற்ப வெளிப்புற தோட்டம் அமைப்பாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், Arcade நடவடிக்கைகள் தொடங்கிய காலத்திலிருந்து, நிறுவனம் இந்த பகுதிகளை பயன்படுத்தவில்லை. நிறுவனம் திட்டத்தின் ஆரம்ப சுற்றுச்சூழல் நிலைபேரான குறிக்கோள்களை அடையவில்லை மற்றும் இந்த பகுதிக்குறிய குத்தகை வருவாயையும் இழந்துள்ளது.	மேல் மாடி பகுதிகள் 2018 ஆம் ஆண்டுக்கு முன் உணவகங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஆனால் மேல் மாடிக்கு வரவிருக்கும் வாடிக்கையாளர்கள் குறைவாக இருப்பதால் குத்தகையாளர்கள் அவற்றை விட்டுச் சென்றனர். ஆரம்பத் திட்டம் மீளாய்வு செய்யப்படும், மற்றும் சேவைப் பகுதியின் எதிர்கால மேம்பாட்டுடன் ஆரம்பத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	புயன்காடற்ற பகுதிகளை திறம்பட பயன்படுத்த நிர்வாகம் மாற்று உத்திகளை ஆராய வேண்டும்.
(ஆ)	2018 ஆம் ஆண்டில் சாலை அபிவிருத்தி ஆணைக்குழுவினால் (RDA) Arcade இல் இரண்டு LED திரைகளை நிறுவப்பட்டது. ஆனால், கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த திரைகள் செயல்படவில்லை. நிறுவனத்தால் RDA-இடமிருந்து குத்தகை வருவாயை வசூலிக்கவோ அல்லது இந்த சொத்துகளின் உரிமையை நிறுவனத்திற்கு மாற்றியமைக்கவோ எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால், நிறுவனம் இத்திரைகளை மூன்றாம் தரப்பிற்கு குத்தகைக்கு விடுவதன் மூலம் மேலதிக வருமானம் உருவாக்கும் வாய்ப்பையும் இழந்துள்ளது.	இரு LED திரைகள் கெனோவின் முகாமையின் அனுமதி இல்லாமல் நிர்மாணிக்கப்பட்டன. இந்த LED திரைகளை மாற்றம் செய்யும் நோக்கத்திற்காக நில அளவீட்டுக்கு உட்பட்டு, RDA-க்கு சொந்தமான நிலத்திற்கு அவற்றை மாற்றுவதற்கு RDA உடன் பின்னர் ஒப்புக்கொள்ளப்பட்டது, அதற்கு தலைவர் அனுமதி அளித்துள்ளார்.	இந்தப் பிரச்சினையை தாமதமின்றி உடனடியாக தீர்க்க நிறுவாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	Arcade இன் இரு பக்கங்களிலும் உள்ள நான்கு ATM பகுதிகள் காலியாக இருந்தது, மற்றும் 2025 செப்டம்பர் 30 ஆம் திகதிவரை நிறுவனம் இதை குத்தகைக்கு வழங்கவில்லை என்பது அவதாணிக்கப்பட்டது.	காலியாக உள்ள இடங்களில் ATM/CRM இயந்திரங்களை நிறுவ இரண்டு வங்கிகளிடம் கோரப்பட்டன. ஒரு வங்கிக்கு வழங்க இயலவில்லை, மற்றய வங்கி புதிய CRM இயந்திரங்கள் வெப்பத்திற்கு மிகவும் நெருக்கமானவை மற்றும் தடையில்லா குளிரூட்டல் தேவைப்படும் என்று தெரிவித்தது, மேலும் வழக்கமான பராமரிப்பு நடைபெற்று வருகின்றது என்றும், அமைப்பில் மேலும் அபிவிருத்திகள் செய்யப்படும் என்றும் உறுதி வழங்கியது.	காலியாக உள்ள ATM இடங்களை குத்தகைக்கு வழங்க நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	நிறுவனம் 2024 ஆம் ஆண்டில் இரண்டு முறைகளில் மொத்தம் ரூபா.1,728,000 செலவு செய்து 12 நீர்தொட்டிகளை கொள்முதல் செய்திருந்நது. ஆனால், 2025 ஜூலை 25 அன்று நடைபெற்ற கணக்காய்வு பரிசோதனையின் போதும் இந்த நீர்தொட்டிகள் பயன்படுத்தப்படாத நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்தின் இந்த சொத்துகளை பயனுள்ளதாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறுவனத்தின் வளங்களின் குறைபயன்பாட்டை குறைக்க, கொள்முதல் செய்யப்பட்ட சொத்துகளை திறமையாக பயன்படுத்துவதை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை வழிகாட்டுதல்களின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் அதன் முதன்மை பெறுகைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.	2026 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தும் வகையில், முதன்மை பெறுகைத் திட்டம் தற்போது தயாரிப்பு நிலையிலுள்ளது.	கொள்முதல் வழிகாட்டுதல்களின் படி, முழுமையான முதன்மை பெறுகைத் திட்டத்தை தயாரித்து அங்கீகாரம் பெறுவதற்கு முகாமை தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டிற்கான பெறுகைக் குழு நியமிக்கப்பட்டதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. இத்தகைய நியமனம் இன்றி, மீளாய்வாண்டில் எடுக்கப்பட்ட பெறுகைத் தீர்மானங்கள் முறையாக நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவால் எடுக்கப்படவில்லை. எனவே, இந்த பெறுகைத் தீர்மானங்கள் நிறுவப்பட்ட பெறுகை விதிமுறைகளின் அடிப்படையில் செல்லுபடியானதாகக் கருதப்பட முடியாது.	இயக்குநர் சபையின் அங்கீகாரம் பெறும் வகையில், பெறுகைக் குழுவை நியமிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	பெறுகைக் குழுவின் நியமன செயல்முறை முறையாக ஆவணப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும்.
(இ)	ரூபா.17,162,844 மொத்த மதிப்பிலான 10 பெறுகை நடவடிக்கைகள் தொடர்பாக, நிறுவனம் பெறுகை வழிகாட்டுதலின் பத்திகள் 3.4.3(d), 4.3.1(a), 5.2.1(a), 5.3.1(a), 6.3.5, 6.3.6 மற்றும் 7.11.1 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை பின்பற்ற தவரியது.	எதிர்காலத்தில் சரியான பெறுகை நடைமுறைகளை பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து பொறுப்பான அதிகாரிகளிடமிருந்தும் விளக்கங்கள் பெறப்படும் மற்றும் அவற்றின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	தேசிய பெறுகை வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	2023 டிசம்பர் 12 ஆம் திகதியிட்ட இயக்குநர் சபைத் தீர்மானத்தின் படி, Arcade இன் இரு பக்கங்களையும் உள்ளடக்கும் வகையில் இரண்டு CCTV கேமரா அமைப்புகளை நிறுவ அனுமதி வழங்கப்பட்டது. எனினும், பணியை ஏற்றுக்கொள்ளும் கடிதம் (Letter of Acceptance) வழங்கப்படாமல், ஒரு தனியார் ஒப்பந்ததாரரால் நிறுவுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. பக்கம் A தொடர்பான CCTV கேமரா நிறுவுவதற்கான பெறுகை ஒப்பந்தம் 2023 டிசம்பர் 20 அன்று கையெழுத்திடப்பட்டது, ஆனால் அதில் ஒப்பந்தத்தின் மொத்த மதிப்பு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் A பக்க கேமரா அமைப்பு நிறுவுவதற்கான பணிகள் முழுமையாக முடிவடைந்திருந்த நிலையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் (TEC) அறிக்கையானது 2024 பெப்ரவரி 29 அன்று சமர்ப்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.	இயக்குநர் சபையின் அறிவுறுத்தலின்படி, பணிகள் 2023 டிசம்பர் 12 ஆம் திகதி முதல் தொடங்கப்பட்டன. பெறுகைச் செயல்முறை முழுமையாக முடிவடையும்வரை, ஒப்பந்த வழங்கல் கடிதம் (Letter of Award) வெளியிட வேண்டாம் என்று பெறுகைப் பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டது. இயக்குநர் சபை வழங்கிய அந்த அறிவுறுத்தலின் அடிப்படையில், பெறுகை அலுவளகர், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் நியாயப்படுத்தல் மற்றும் பரிந்துரை அறிக்கையில் சம்பந்தப்பட்ட தகவல்களை சேர்த்துள்ளார்.	முகாமை, வழங்குநர்களுக்கு எந்தவொரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தமும் இல்லாமல் பணிகள் வழங்கப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், நிறுவனத்தின் இயக்குநர் சபை கூட்டத் தீர்மானங்கள், சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
(உ)	நிறுவனம் 2023 ஆம் ஆண்டு Arcade லுள்ள கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையங்களை (Wastewater Treatment Plants) பழுது பார்த்தல் பணிகளுக்காக விலைமனு (Bid) கோறல் வெளியிப்பட்டது. எனினும், ஒருவர் மட்டுமே விலைமனுவை சமர்ப்பித்திருந்தார். நிறுவனம் அதனை மதிப்பீடு செய்யவில்லை. பின்னர், 2024 மார்ச் 19 அன்று, அதே ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா.4,243,280 பெறுமதியான புதுப்பிக்கப்பட்ட விலைமனு ஒன்று பெறப்பட்டதுடன் இது மற்றொரு ஒப்பந்ததாரின் விலைமனுவுடன் மதிப்பீடு செய்யப்பட்டது. பின்னர் இரண்டாவது ஒப்பந்ததாரருக்கு ரூபா.500,000 விலையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. எனினும், 2025 ஜுலை 25 அன்று நடத்தப்பட்ட கணக்காய்வு மேற்பார்வையின் போது, பழுது பார்த்த கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையம் இயங்காமல் இருந்ததுடன் சுத்தீகரிப்பு செய்யப்படாத கழிவுநீர்	"Pure Water System" வழங்கிய விலைமனுவுக்கமைய பணியின் நோக்க எல்லை (Scope of Work) அடங்கியுள்ளதை உதவி பொறியியளாலர் உறுதி செய்தார் மற்றும் கழிவுநீர் சுத்தீகரிப்பு நிலையங்களை (Wastewater Treatment Plants) பராமரிப்பதற்காக மேற்கண்ட நிறுவனத்தை தெரிவு செய்ய பரிந்துரை செய்தார். இது ஒரு பெறுகை கோரிக்கையின் (Purchase Requisition) மூலம் மேற்கொள்ளப்பட்டது.	நிறுவனம் அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளிலும் கொள்முதல் வழிகாட்டுதல்களின் படி செயல்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

	சுற்றுச்சூழலுக்கு வெளியேறிக் கொண்டிருந்ததை அவனிக்கக் கூடியதாக இருந்தது.		

3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 நவம்பர் 16 ஆம் திகதி மற்றும் nghJ epWtdq;fs; Rw;wwpf;if ,y. 01/2021 இன் பிரிவு 3.2 (i) படி, சபையின் அனுமதி மற்றும் துறைசார் அமைச்சின் பரிந்துரைகளுடன் ஆளணி கட்டமைப்பு மற்றும் Ml;Nru;g;Gj; திட்டத்திற்கான அனுமதியை பெற நிறுவாகம் முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், நிறுவனம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தடமிருந்து அனுமதி பெற்றிருக்கவில்லை	2022 மே 18 ஆம் திகதியுள்ள கடிதத்திற்கமைய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இயக்குநர் கூறியுள்ளார், தொடர்புடைய அனைத்து விவகாரங்களிலும் தேவையான தீர்மானங்களை எடுக்க இயக்குநர் சபைக்கு தகுதியுள்ளது. எனினும், தேவைப்பட்டால் எதிர்காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தடமிருந்து அனுமதி பெறப்படும்	nghJ epWtdq;fs; சுற்றறிக்கையின் (Public Enterprises Circular) விதிகளை பின்பற்ற வேண்டும்.
(ஆ)	2016 அக்டோபர் 27 ஆம் திகதியிட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல.01/2015(i) க்கு முறனாக நிறுவனம் அதன் தலைவருக்கு 2020 ஏப்ரலில் இருந்து மாதத்திற்கு ரூபா.50,000 மேலதிக வாகன கொடுப்பனவை செலுத்தியதுடன் இது 2024 ஏப்ரல் முதல் மேலும் ரூபா.50,000 ஆல் உயர்த்தப்பட்டது. இதற்கமைய, திறைசேரியின் அனுமதியின்றி வாகன கொடுப்பனவாக ரூபா.3,300,000 செலுத்தப்பட்டிருந்தது.	வாகன கொடுப்பனவுகள் இயக்குநர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கு, 2020 ஜனவரி 27ஆம் திகதியிட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல.01/2020 இல் குறிப்பிடப்பட்ட வரம்புகளுக்குள் மட்டுமே கொடுப்பனவு வழங்கப்படுகிறது.	nghJ epWtdq;fs; சுற்றறிக்கையின் (Public Enterprises Circular) விதிகளை பின்பற்ற வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கூட்டிணைந்த திட்டம்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOE) நல்லாளுகை வழிகாட்டுதலின் (Guidelines on Corporate Governance for State	நிறுவனத்தின் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படும்.	நிறுவனம் எதிர்கால காலத்தில் இந்த முக்கிய திட்ட ஆவணங்களை நேரத்திற்குள் தயாரித்து

Owned Enterprises) பத்தி 2.3 படி, தற்போதைய ஆண்டையும் உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க வேண்டும். ஆனால், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கான கூட்டிணைந்த திட்டத்தை நிறுவனம் தயாரிக்கவில்லை.		சமர்ப்பிப்பதன் மூலம் நல்லாளுகைகட்ட மைப்புடன் இணங்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கும்.

4.2 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் (SOE) நல்லாளுகை வழிகாட்டுதலின் (Guidelines on Corporate Governance) பத்தி 4.4 இன்படி உள்ளக கணக்காய்வாளர் (Internal Auditor) நியமிக்கப்பட வேண்டும். இருப்பினும், நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை மற்றும் தாய் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு செயல்பாட்டின் கீழும் வரவில்லை.	கனோவின் ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிடட் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு செயல்பாடுகள் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபணத்தின் (SLIC) கணக்காய்வு பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் காலாண்டு உள்ளக கணக்காய்வுகள் நடாத்த SLIC கணக்காய்வு துறையுடன் ஒத்திசைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	குறிப்பிடப்பட்ட நல்லாளுகை தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

4.3 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான (SOE) நல்லாளுகை வழிகாட்டுதலின் (Guidelines on Corporate Governance) 4.2 பிரிவின்படி, கணக்காய்வு குழு (Audit Committee) குறைந்தது ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஒரு முறை கூட்டப்பட வேண்டும் என்றாலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஒரே ஒரு கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டுள்ளது.	தாய் நிறுவனத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கணக்காய்வு குழு (Audit Committee) உறுப்பினர் 2024 ஆகஸ்ட் மாதத்தில் ராஜினாமா செய்தார். மேலும், நிறுவனத்தின் இயக்குநர் சபை 2025 ஜனவரி மாதத்தில் ராஜினாமா செய்தது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய உறுப்பினரை கணக்காய்வு குழு நியமித்துள்ளது, மற்ற இயக்குநர்கள் நியமிக்கப்பட்டதும் கணக்காய்வு குழு கூட்டங்களை உடனடியாக நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.	குறிப்பிடப்பட்ட நல்லாளுகை தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும்.

4.4 சுற்றாடல் ரீதியான விடயங்கள்

கணக்காய்வு விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிறுவனம் ஒரு முறையான கழிவு பொருட்களை அகற்றும் முறைமையை பராமரிக்க வில்லை மற்றும் தனது வளாகத்தில் கழிவுகளை தேக்கி வைத்திருப்பது அவதானிக்கப்பட்டது. இதனால் Arcade பகுதி சுத்தமற்றதாகவும், துர்நாற்றத்தினை ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளது.	சேவைப் பகுதியின் தினசரி அதிக பயன்பாட்டின் காரணமாக, நிறுவனம் முறையாக கழிவுகளை பிரிக்க முயன்றபோதிலும், முழுமையாக பிரித்தல் சவாலாக உள்ளது. ஏவ்வாறாயினும், மதுகம பிரதேச சபையானது கழிவுகளை அப்புறப்படுத்தும் மைதானம் இல்லாததால் சேகரிக்க மறுத்துள்ளது, கழிவு முகாமை ஆணைக்குழுவிடம் (WMA) வழிகாட்டுதலைப் பின்பற்றி, நிறுவனம் பரிந்துரைக்கப்பட்ட தனியார் சேகரிப்பாளர்களிடமிருந்து முன்மதிப்பீடுகளைப் பெற்று அதில் ஒருவரை தேர்ந்தெடுத்தது. தற்போது WMA-வின் ஆதரவுடன் முறையாக கழிவுகளை அகற்றும் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.	முகாமை முறையான சேகரிப்பு, வகைப்பாடு மற்றும் அகற்றுதலலைக் கொண்ட ஒரு பயனுள்ள கழிவுப் பொருள் அகற்றும் முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும்.